# பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிங்கப்பூரர் தடுப்புக் காவலில்

சிங்கப்பூர் ஆயுதப்படையின் முழுநேர தேசிய சேவையாளர் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

இருபது வயதாகும் முகம்மது ஃபடில் அப்துல் ஹமீது, இணையத்தில் புனிதப்போர் செய்திகளையும் விடியோக்களையும் தேடிப் பார்த்து, சொந்தமாகத் தீவிரப் போக்கை வளர்த்துக் கொண்டார்.

தீவிரப் போக்குள்ள சமயத் தலைவர்கள் இணையத்தில் வெளியிட்ட போதனைகள் அவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தின. அதனால் "சக போராளிகளுடன் சேர்ந்து ஆயுதத்தைக் கையிலெடுத்து புனிதப்போர் தொடுத்து, வீரத்தியாகம் செய்வது தனது சமயக் கடமை என்று அவர் உறுதியாக நம்பினார்," என்று அமைச்சின் அறிக்கை குறிப்பிட்டது.

தீவிரப் போக்குள்ள சமயப் போதகரான அன்வர் அல்-அவ்லாகியுடன் ஃபடில் தொடர்பு கொண்டு, பாலஸ்தீனம், ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் போராளியாகப் புனிதப் போரில் ஈடுபட விருப்பம் தெரிவித்தார். இவர் ஏப்ரல் 4ம் தேதி கைது செய்யப்பட்டார்.

மேலும் இரு சிங்கப்பூரர்கள் ஜூன் 23 முதல் ஈராண்டு காலம் கட்டுப்பாட்டு உத்தரவின்கீழ் வைக்கப்பட்டதாக அமைச்சு தெரிவித்தது. 44 வயது முகம்மது அன்வர் ஜைலானி, 27 வயது முகம்மது தாஹிர் பின் ஷேக் தாவுத் ஆகியோர் அவ்விருவர்.

கட்டுப்பாட்டு உத்தரவின்கீழ் இருப்பவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை இயக்குநரின் முன் அனுமதியின்றி தங்கியிருக்கும் இடத்தை அல்லது வேலை செய்யும் இடத்தை மாற்றவோ அல்லது சிங்கப்பூருக்கு வெளியில் பயணம் செல்லவோ முடியாது.

இதற்கிடையே, ஜமா இஸ்லாமியா உறுப்பினர் இப்ராஹிம் முகம்மது நூர் ஜூன் 1ம் தேதி, உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் இடைநீக்க உத்தரவின்கீழ் விடுவிக்கப்பட்டார்.

இடைநீக்க உத்தரவின்கீழ் விடுவிக்கப் படுபவர், விடுதலையான பிறகு குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு உட்படவேண்டும். அந்த நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடு களுக்கும் உட்படத் தவறினால், அவர் மீண்டும் காவலில் வைக்கப்படலாம்.

பயிற்சி பெற்ற தீவிரவாதியான இப்ராஹிம், சென்ற 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம், உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையினர் சிங்கப்பூரில் ஜமா இஸ்லாமியா உறுப்பினர் களைக் கைது செய்தபோது, சிங்கப்பூரிலிருந்து தப்பிச் சென்றார். ஆனால், வட்டாரப் பாதுகாப்பு அமைப்புடன் சேர்ந்து உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையில், 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவர் கைது செய்யப்பட்டு, உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டார்.